1973 நவம்பர் 21]

வற்புறுத்தியிருக்கிறோம். அப்படியிருந்தும் இன்னும் பேருந்து விடப்படாமலிருப்பதற்கான காரணத்தை அமைச்சரவர்கள் தெரிவிப்பார்களா? இவ்வளவு கெஞ்சுதல்களுக்குப் பிறகாவது—இனிமேலாவது விரைந்து செயல்படுத்துவதற்கு அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, இந்த துணை வினா 290-வது கேள்விக்குரியது என்று கருதுகிறேன். சோழன் போக்குவரத்துக் கழகத்திற்கு அந்த வழியாக பஸ் விடுவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. பஸ் கிடைத்தவுடன், அவர்கள் பஸ் விடுவதற்கு ஏற்பாடு செய்வார்கள்.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, உண்மையில் நமது அரசுடைமையாக்கும் திட்டத்தின்கீழ் மாயூரம் சக்தி விலாஸ் நிறுவனத்தைச் சேர்ந்த 50-க்கு மேற்பட்ட பஸ்களை அரசாங்கம் ஏற்றுள்ளது என்று பத்திரிகையில் பார்த்து தெரிந்து கொண்டேன். மிக்க மகிழ்ச்சி. அந்த பஸ்களிலிருந்து—ஓடுகின்ற பஸ்ஸாக பார்த்து, ஒன்றினை இந்த வழித்தடத்தில் விடுவதற்கு அமைச்சரிடம் கோரிக்கை வந்தால் அதற்கு அனுதாபத்துடன் அனுமதி அளிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: அனுதாபங்கள் நிறைய உண்டு.

ஆலய ஊழியர்கள் ஊதியம்

*292 வினா—திரு. அ. தேவேந்திரன்: மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டிலுள்ள ஆலய ஊழியர்களுக்கு மாத முதல் வாரத்திலேயே சம்பளம் கொடுக்கப்படுவது குறித்து அரசு நடவடிக்கை ஏதேனும் எடுத்துள்ளதா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: இல்லை.

திரு. அ. தேவேந்திரன்: தலைவரவர்களே, பொதுவாகவே, 10, 15 தேதிக்குப் பிறகுதான் ஆலய ஊழியர்களுக்கு சம்பளம் கொடுக்கப்படுகிறது. அதனால் ஊழியர்கள் மிகவும் சங்கடப்படுகிறார்கள். ஆகவே, முதல் வாரத்திலேயே சம்பளம் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, ஏற்கனவே உள்ள அறநிலையத் துறைச் சட்ட விதிகளின்படி இப்போது முதல் வாரத்தில் ஊழியர்களுக்கு சம்பளம் கொடுத்து வருகிறார்கள். எந்த இடத்திலாவது முதல் வாரத்தில் சம்பளம் கொடுக்காமல், தாமதம் ஏற்படுமானால் மேலதிகாரிகளின் கவனத்திற்கு அது கொண்டுவரப்படுமானால் அதுபற்றி தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: இந்த அறநிலைய ஊழியர்கள் நமது முதலமைச்சரவர்களை சந்தித்து, அவர்களுக்கு இருக்கின்ற குறைகளைத் தீர்த்து, முதல் வாரத்திலேயே சம்பளம் கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்களே. அது என்ன ஆயிற்று என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, ஆலய ஊழியர்கள் மாநாட்டில் சில கோரிக்கைகளை முதலமைச்சர் முன் வைத்தார்கள். சில கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டு உடனடியாக உத்தரவும் இந்தத் துறையிலிருந்து பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் ஆலயங்களில் பணியாற்றும் ஊழியர்களுக்கு தாமதமாகச் சம்பளம் கொடுக்கப்படுகிறது என்று எதுவும் அந்த கோரிக்கையில் குறிப்பிடப்படவில்லை. எந்தக் கோவில் ஊழியர்களுக்காவது சம்பளம் வழங்குவதில் தாமதம் ஏற்படுவதாக அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்தால், நிச்சயமாக தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

Sai Baba Temple, Mylapore.

* 293 Q.—Thiru S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(a) whether there is any proposal to take over the Sri Sai Baba temple in Mylapore, Madras under the administrative control of Hindu Religious and Charitable Endowments Department; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: சென்னை, மயிலாப்பூரிலுள்ள "சாய்மந்திர்" எனப்படும் சாய்பாபா திருக்கோயிலை 1959-ஆம் ஆண்டின் இந்து சமய அறநிலையச் சட்டத்தின்படி ஓர்